பதவி வெற்றிடம்

வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்

(புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் இணை நிறுவனம், கைத்தொழில் மற்றும் தொழில்முனைவு அபிவிருத்தி அமைச்சு)

பின்வரும் பதவி வெற்றிடத்திற்காக தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

புவியியலாளர் (Geologist) (MM 1-1 – Grade II) ஒப்பந்த அடிப்படையில் 01 பதவி

தேவையான தகைமை மற்றும் அனுபவம்

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் புவியியல் (விசேட) பட்டம் (1ஆம் அல்லது 2ஆம் வகுப்புச் சித்தி) சகிதம் இரசாயனவியல் / பௌதிகவியல் / கணனி விஞ்ஞானம் / உயிரியல் போன்றவற்றை மேலதிக பாடமாகக் கொண்டிருத்தல்.

மற்றும்

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் புவியியல் துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் ஒரு (01) வருட கால அனுபவம்.

உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

(1) மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

(2) பதவியின் புவியியல் துறையில் ''கனிஷ்ட முகாமையாளர் வகுதியில்" (JM 1-1) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவு

அடிப்படைச் சம்பளம் - (2025 இல்) 71,730.00 மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

மேலதிக நன்மைகள்:

- EPF மற்றும் ETF நிதியத்திற்கான பங்களிப்பு
- வருடாந்த இலாபத்தின் மீதான ஊக்குவிப்புக் கொடுப்பனவு
- ஊழியர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கான விரிவான மருத்துவக் காப்புறுதி
- நிறுவனத்தின் நலன்புரி நன்மைகளுக்கான தகுதி.. இன்னும் பல.

- **வயதெல்லை**

22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (விண்ணப்பம் முடிவுறுத்தப்படும் நாளில் அல்லது அதற்கு முன்) உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்கள் மற்றும் தங்களின் கல்வி, தொழில்சார் மற்றும் ஏனைய தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் பின்வரும் முகவரிக்கு 2026-12-14ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிகள் சபைகளின் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

தேவைப்படும் தகுதிகளை நிரூபிப்பதற்கு சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் அற்ற விண்ணப்பங்கள் மற்றும் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

பிரதான நிறைவேற்று அதிகாரி,
வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,
இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,
பிட்டகோட்டே.